டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 25.11.2023 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 132 - Madurai | Online Edition

# தேசிய கோபால் ரத்னா விருது

## திண்டுக்கல் மாவட்டம் நத்தம்கோவில்பட்டி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் தேர்வு

புது தில்லி, நவ.24

தேசிய பால் தினமான நவம்பர் 26 அன்று, மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா கோபால் ரத்னா விருதுகளை வழங்க உள்ளார்.

அசாம் மாநிலம் குவஹாத்தியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மைதானத்தில் இதற்கான விழா நடைபெற உள்ளது. இந்த விருது வழங்கும் விழாவில் அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா, மத்திய பால்வளத்துறை இணையமைச்சர் சஞ்சீவ் குமார் பல்யான் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

தேசிய கோபால் ரத்னா விருது கால்நடை மற்றும் பால் பண்ணைத் துறையில் மிக உயர்ந்த தேசிய விருதுகளில் ஒன்றாகும். உள்நாட்டுக் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பால் கூட்டுறவு சங்கங்கள், பால் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பால் பண்ணையாளர்கள் போன்றோரை அங்கீகரித்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த விருது வழங்கப்படுகிறது. இவ்விருது கீழ்கண்ட மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகிறது.

1. நாட்டு மாடுகள், எருமை இனங்களை வளர்க்கும் சிறந்த பால் பண்ணையாளர்

2. சிறந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், பால் உற்பத்தியாளர் நிறுவனம், பால் பண்ணையாளர் அமைப்பு

3. சிறந்த செயற்கைக் கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர் (ஏஐடி)

இந்த விருதில் முதல் இரண்டு பிரிவுகளில் முதல் பரிசாக ரூ.5 லட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.3 லட்மும், மூன்றாவது பரிசாக ரூ.2 லட்சமும் வழங்கப்படும். அத்துடன், தகுதிச் சான்றிதழ் மற்றும் நினைவுப்பரிசும் வழங்கப்படும்.

சிறந்த செயற்கை கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர் (ஏ.ஐ.டி) பிரிவில், தேசிய கோபால் ரத்னா விருதில் தகுதி சான்றிதழ் மற்றும் நினைவுப்பரிசு மட்டுமே வழங்கப்படும்.

உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெற்று இந்த ஆண்டுக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறை அறிவித்துள்ளது.

இதில் இரண்டாவது வகையான “உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், பால் உற்பத்தியாளர் நிறுவனம், பால் பண்ணை யாளர் அமைப்பு” என்ற பிரிவில் தமிழ்நாட்டின் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த நத்தம்கோவில்பட்டி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மூன்றாவது இடத்துக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

# புதிய ரக சணப்பு பயிர் ADP 1-ல் வயல் விழா



புதுக்கோட்டை, நவ.24

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன், வேளாண்மை அறிவியல் நிலையம், மூலம் புதிய இரக சணப்பு பயிர் ADP 1 செயல் விளக்கத்திடல் வடகாடு கிராமத்தில் மனோன்மணி என்பவரின் பண்ணையில் அமைக்கப்பட்டு அதற்கான வயல் விழா 24/11/23 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.யுவராஜா, புதிய சணப்பு இரகம் ADT 1 இன் சிறப்பியல்புகள் மற்றும் பசுந்தாள் உரப்பயிர்கள் இடுவதால் மண்ணில் ஏற்படும் நன்மைகள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி பேராசிரியர் முனைவர் வீ.விஜயலட்சுமி (விதை தொழில் நுட்பம்) பசுந்தாள் உர பயிர்களில் விதை உற்பத்தி பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் அ.தினகரன், வேளாண் காலநிலை கவணிப்பாளர் வானிலை முன்னறிவிப்பு மற்றும் வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள் பற்றி எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் சுமார் 30க்கும் பேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தர்பூசணி சாகுபடிக்கு உகந்த ரகங்கள்

காஞ்சிபுரம், நவ.24

இயற்கை கடவுள் கோடை காலத்தில் மனிதர்களுக்கு கொடுத்த அமுதம் தான் தர்பூசணி. சிறுநீர் வராமல் சிரமப்படுவர்கள், நீர் கடுப்பு பிரச்சனை மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் உகந்த ஒரு பழம். இதனை சாகுபடி செய்ய நல்ல வடிகால் வசதி உள்ள மணற் பாங்கான மண் ஏற்றதாகும். தர்பூசணி செடி மிதமான வெப்பம், அளவான ஈரப்பதம், நல்ல சூரிய வெளிச்சம் உள்ள காலங்களான ஜனவரி – மார்ச் ஏற்ற மாதங்கள் ஆகும். காஞ்சிபுரம் (ம) செங்கல்பட்டு மாவட்டங்களில் விவசாயிகள் கார்த்திகை / மார்கழிப் பட்டங்களில் தர்பூசணி விதைப்பு மேற்கொள்ளுவார்கள். நல்ல இரகங்களைத் தேர்வு செய்து சாகுபடி செய்வதால் பூச்சி நோய்த் தாக்குதல் இன்றி நல்ல மகசூல் எடுக்க இயலும்.




### தர்பூசணி சாகுபடிக்கு மிகவும் உகந்த இரகங்கள்

### வெளிர்பச்சை நிறம்

| வ. எண் | இரகம் | வயது | பழத்தின் எடை |
|---|---|---|---|
| 1. | நம்தாரி | 62-65 நாட்கள் | 3-5 கி / பழம் |
| 2. | பக்கீஷா | 70-75 நாட்கள் | 10 கி / பழம் |
| 3. | மாதுரி 64 | 70-75 நாட்கள் | 8-12 கி / பழம் |
| 4. | அர்க்கா ஜோதி | 75-80 நாட்கள் | 6-8 கி / பழம் |
| 5. | அர்க்கா ஐஸ்வர்யா | 75-80 நாட்கள் | 10-12 கி / பழம் |
| 6. | F1 ஹைப்ரிட் US 777 | 80-85 நாட்கள் | 8-10 கி / பழம் |
| 7. | ஜீப்ளி கிங் | 85-90 நாட்கள் | 8-12 கி / பழம் |
| 8. | டிராகன் கிங் | 85-90 நாட்கள் | 8-12 கி / பழம் |
| 9. | அபூர்வா | 90-100 நாட்கள் | 8-10 கி / பழம் |
| 10. | அர்க்கா மானிக் | 110-115 நாட்கள் | 6 கி / பழம் |

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

கரும்பச்சை நிறம்

| வ. எண் | இரகம் | வயது | பழத்தின் எடை |
|---|---|---|---|
| 1. | மெலோடி F1 | 65-70 நாட்கள் | 4-5 கி / பழம் |
| 2. | மேக்ஸ் | 65-70 நாட்கள் | 4-5 கி / பழம் |
| 3. | சுகர் குயின் | 75-78 நாட்கள் | 2.5-4கி/பழம் |

தர்பூசணியினை மூன்று விதமாக நடவு வயலில் விதைகளை விதைக்கலாம். அவை



1. இரண்டு முதல் மூன்று மீட்டர் இடைவெளியில் பார் அமைத்து பாரின் இருபக்கங்களிலும் விதைகளை 2 - 3 அடி இடைவெளியில் ஒரு குழிக்கு 3 – 4 விதைகளை ஊன்றலாம்.

2. குழி நடவு முறையில் 60x60x60 செ.மீ அளவில் குழி அமைத்து குழிகளுக்கிடையே 2-3 மீட்டர் இடைவெளி விட்டு ஒரு குழிக்கு 4 விதைகள் ஊன்றலாம்.

3. வீரிய ஒட்டு இரகங்களுக்கு ஆற்றுப்படுகை நடவு முறையில் 30x30x30 செ.மீ அளவில் குழி அமைத்து குழிகளுக்கிடையே 1 - 1.5 மீட்டர் இடைவெளி விட்டு ஒரு குழிக்கு 2 விதை என்ற அளவில் விதைகளை ஊன்றலாம்.

நேரடி விதைப்பிற்கு (இரகங்கள் / வீரிய இரகங்கள்) ஒரு ஹெக் டருக்கு 3 - 3.5 கிலோ வரை தர்பூசணி விதைகள் தேவை. விதைகளை பன்னிரெண்டு மணி நேரத்திற்கு மிதமான வெந்நீரில் ஊற வைத்து அதன் பிறகு ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டி.விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் (பூஞ்சானம் / பாக்டீரியாகளை) விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைத்தல் அவசியம். தர்பூசணி சாகுபடியில், நல்ல இரகங்களை தேர்வு செய்வதன் மூலம் மகசூல் இழப்பு தவிர்த்து 20 - 25% கூடுதல் மகசூல் ஈட்ட வழி வகுக்கும் என காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை நிலைய விதைப்பரிசோதனை அலுவலர், கு.ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம்



புதுக்கோட்டை, நவ.24

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன், வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ.யுவராஜாவின் ஆலோசனைப்படி திருவரங்குளம் வட்டாரம், காயாம்பட்டி ஊராட்சி வடக்குகல்லுப்பள்ளம் கிராமத்தில் 23.11.23 அன்று கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமினை ஊராட்சி மன்ற தலைவர் ராமதாஸ் தொடங்கி வைத்தார்.




வேளாண்மை அறிவியல் நிலையம் வம்பன் கால்நடை மருத்துவர் முனைவர் வ.பா.ராகவேந்திரன், முகாமில் பேசுகையில் மழை காலத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவனம், மற்றும் அடர்தீவனம் எவ்வாறு அளிப்பது, கால்நடை தொழுவத்தை கிருமி நாசினி பயன்படுத்தி சுத்தமாக வைத்து கொள்ளவது மற்றும் மழை காலத்தில் கோழிகளை இரத்த கழிச்சல் நோயில் இருந்து எவ்வாறு பாதுகாப்பது என்றும் கிராம மக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் 180 கால்நடைகளுக்கு குடல் புழு நீக்க மருந்து மற்றும் சிகிக்சையினை வழங்கினார். இம்முகாமில் திருவரங்குளம் கால்நடை உதவி மருத்துவர் சுப்பிரமணியன் மற்றும் கால்நடை உதவி ஆய்வாளர் சங்கீதா ஆகியோர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசியை செலுத்தினர்.

# விவசாயத்தில் கார்த்திகை மாதமும் கார்த்திகை தீபமும் – ஓர் பார்வை

கார்த்திகை மாதத்தில் கனமழை பெய்யும் என்பது நமது விவசாய பெருமக்களின் நீண்ட நெடிய கால அனுபவத்தில் உணர்ந்த கால நிலை கணக்கு ஆகும். புரட்டாசி மாத கடைசி வாரம் தொடங்கி பெய்யும் வடகிழக்கு பருவமழையைக் கொண்டு நெற் பயிர் சாகுபடி செய்யும் பொருட்டு நாற்றங்கால் தயாரித்து விதைத்து, ஐப்பசி மாதத்தில் பெய்யும் அடைமழையைக் கொண்டு நெல் நாற்றுகளை நடவு செய்து கழனி முழுதும் பசுமையாக காட்சியளிக்கும். கார்த்திகை மாதத்தில் நெற்பயிரானது நன்கு செழித்து வளரும் தருவாயில் இலை சுருட்டுப்புழு, யானை கொம்பன் புழு, இளம் மஞ்சள் தண்டுப்புழுவின் தாக்குதல்களும் மற்றும் புகையானின் தாக்குதலும் அதிகளவில் காணப்படும். இந்த சூழ்நிலையில் வருவது




தான் கார்த்திகை பண்டிகையாகும். அதிக பிரகாசமான வெளிச்சத்துடன் கூடிய வெப்பம் பூச்சிகளை கவர்ந்து அழிக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. இதை நன்கு அறிந்து வைத்திருந்த நமது முன்னோர், மின்சார விளக்குகள் இல்லாத அன்றைய நாட்களில், அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை தாக்கும் பூச்சிகளை கவர்ந்து அழிக்கும் விதமாக, ஒவ்வொரு வீட்டிலும் தீபம் ஏற்றியும், பனை மற்றும் தென்னை ஓலைகளை வைத்து எரிக்கச் செய்து 'சொக்கப்பனை' எரிக்கும் விழாவாக ஊரை சுற்றி உள்ள கோவில்கள் அருகே ஒரு விழா போல் நடத்துவார்கள். அந்த சொக்கப்பனையின் தீப்பிழம்பில் பிரகாசமான வெளிச்சத்தால் கவர்ந்திழுக்கப்பட்ட பூச்சிகள் விழுந்து மடிந்து போகும். அதன் மூலம் விவசாயிகள், பயிரைத்தாக்கும் பூச்சிகளின் சேதத்திலிருந்து தங்கள் பயிரை பாதுகாப்பார்கள். எனவே நாமும் கொண்டாடப்படும் பண்டிகையின் உண்மையான நோக்கங்களை அறிந்து இந்த திருக்கார்த்திகையில் தீப விளக்குகள் ஏற்றி, சொக்கப்பனை வளர்த்து விவசாயிகளின் பயிர்களை பூச்சிகளின் சேதத்திலிருந்து காப்பாற்றுமாறு கொண்டாடி மகிழ்வோம். இதனை திருநெல்வேலி, விதைப் பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர், ம.மகேஸ்வரன் தெரிவித்தார்.

# கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் பயிற்சி

அரியலூர், நவ.24

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் (அட்மா) ராபி பருவத்திற்கான கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகளுக்கான முதற்கட்டப் பயிற்சி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் வானதிரையன்பட்டினம் மற்றும் அங்கராயநல்லூர் கிராமங்களில் நடைபெற்றது. வட்டார வேளாண்மை இயக்குநர் சுப்ரமணியன் தலைமை வகித்தார். அவர் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண்துறை செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கினார். வேளாண்மை அலுவலர் மகேந்திரவர்மன் முன்னிலை வகித்தார்.






கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் திருமலை வாசன் கலந்து கொண்டு விவசாயி களுக்குப் பயிற்சி அளித்தார். சர்வதேச சிறுதானிய ஆண்டான இவ்வாண்டில் விவசாயிகள் குறைந்த சாகுபடி செலவு மற்றும் குறைந்த அளவு நீர் தேவைப்படும் கம்பு, தினை, வரகு, கேழ்வரகு, தினை, சாமை, சோளம் போன்ற ஊட்டச்சத்து மிக்க சிறு தானியங்களை சாகுபடி செய்ய வேண்டும் எனவும், அங்ககப் பண்ணைய முறையில் பயிர் சாகுபடித் தொழில் நுட்பங்கள் குறித்தும் விளக்கினார். மேலும் இரசாயன உரங்களை பயன்படுத்தாமல் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் சோலார் விளக்குப் பொறி, இனக்கவர்ச்சிப் பொறி, மஞ்சள் மற்றும் நீல வண்ண ஒட்டும் அட்டை ஆகியவை குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங் களுக்கு பதிலளித்தார். மேலும் உழவன் செயலியில் விவசாயிகள்




தங்கள் சாகுபடி நிலத்திற்கான மண் ஆய்வு முடிவுகளை பெற உதவும் தமிழ் மண்வளம் செயலி குறித்து விளக்கி மண் ஆய்விற்கு மண்மாதிரி எடுக்கும் முறையை செயல் விளக்கம் செய்து காட்டினார். இப்பயிற்சியுடன் விவசாயிகள் விவசாய கடன் அட்டை (Kisan Credit Card) பெறுவது குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

உதவி வேளாண் அலுவலர்கள் ராம்குமார், செல்வம் கலந்து கொண்டு கிராம அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் திட்டங்கள் மற்றும் கிடங்கு இருப்பு குறித்த விபரங்களைத் தெரிவித்தனர். வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் உழவன் செயலியை பயன்படுத்தி இடுபொருட்கள் முன்பதிவு செய்யும் முறைகள் குறித்தும் விளக்கினார். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கியராஜ்; ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஊராட்சி மன்றத் தலைவர் சாமிதுரை செய்திருந்தார்.


தனம் தரும்
தினம் தினம்
Dairy Connect
make it happen
பால்பண்ணையில்
நிலையான வளமான வருமானம் பெற
யுக்திகளும் வழிமுறைகளும்
IT' S NOT THE COW
IT' S THE HOW
வெள்ளிக்கிழமை, டிசம்பர் 15
பரிமளம் மஹால்
ஈரோடு
உங்கள் பதிவுக்கு முந்துங்கள்!
90430 06166, 93602 82066,
99409 40144
பதிவு கட்டணம் :
விவசாயிகள் : ரூ.600
பால் தொழில்முனைவோர்கள்&
மற்றவர்கள் : ரூ.1000
CONCEIVERS
KAMADHENU CATTLE FEEDS
RGS VET NUTRACEUTICALS COY
CURATORS
POINTBLANK
CONDUCTORS
KONTAK EXHIBITIONS & FAIRS
PLATINUM SPONSOR
KAMADHENU CATTLE FEEDS
prompt
KEMIN
DIAMOND SPONSOR
Phileo by Lesaffre
CHENNAI METTEX LAB PRIVATE LIMITED
GOLD SPONSOR
RGS VET NUTRACEUTICALS COY
trouw nutrition
a Nutreco company

# ஆரோக்கியம் தரும் ஆர்கானிக் விளைபொருட்கள்!



இன்றைய காலகட்டத்தில் எங்கு பார்த்தாலும் ஆர்கானிக் காய்கறிகள், பழங்கள், தானியங்கள் விற்பனை செய்யப்படுவதை நாம் காணலாம். இது ஒரு பேசனாக இருந்தாலும் கூட, உண்மையான ஆர்கானிக் சான்று பெற்ற ஆர்கானிக் பொருட்களை வாங்கி உண்ண வேண்டும். போலிகள் நிறைய வந்து விட்டன. எது உண்மையான ஆர்கானிக் விளை பொருட்கள் என தேடி பார்த்து வாங்கி பயன் படுத்தினால் நாம் ஆரோக்கியமாக வாழலாம்.

**ஆர்கானிக் விவசாயம் என்றால் என்ன?**

ஆர்கானிக் விவசாயம் என்பது நமது பாரம்பரிய இயற்கை முறை விவசாயம் தான். மண் வளத்தை பெருக்க இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளை தவிர்த்து உயிரியல் அல்லது கரிம பொருட்களை பயன்படுத்தி, சாகுபடி செய் வதாகும். சுற்றுச்சூழல் மாசுபாடு இன்றி கழிவை குறைத்து, சமநிலையை பேணுவது இதனுடைய அடிப்படையான செயல் முறையாகும். பயிர் சுழற்சி, பசுமை உரம், கரிம கழிவு, உயிரியல் பூச்சி கட்டுபாடு போன்ற செயல்பாடுகளை உள்ளிடக்கியது.

**இதனால் எற்படும் விளைவுகள்?**

ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி பயன்பாடு முற்றிலும் தவிர்க்கப்பட்டு நிலத்தை முழுமையான ஆர்கானிக் பயன்பாடு நிலமாக மாற்ற மூன்றாண்டுகள் குறைந்த பட்சமாக தேவைப்படுகின்றன. ஆர்கானிக் விவசாயத்தில் கார்பனின் அடித்தளம் (CARPON FOOT POINT) மிகவும் குறைவு தான். இது மண்ணின் ஆரோக்கியத்தை காக்கிறது. இயற்கையான சூழல் அமைப்பை தொடர்ந்து புதுப்பிக்க உதவுவதுடன் சுத்தமான நீர் காற்று கிடைக்கிறது.

**நமக்கு எது தேவை?**

நாம் உட்கொள்ளும் உணவுகள் பெரும்பாலானவை இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி பயன்படுத்தி தான் விளைவிக்கப்படுகிறது. அதுவும் விவசாயிகள் போட்டி போட்டிக் கொண்டு உரங்களையும், பூச்சி மருந்தை தெளிப்பதால் இன்று நாற்பது வயதுக்குள் ஏகப்பட்ட நோய்களும் மிகவும் கொடுமையான புற்று நோய்களும் நாளுக்கு நாள் அதிகரிக்க தொடங்கிவிட்டன. இதனால் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக இன்றைய ஆர்கானிக் சாகுபடி பரவலாக பரவி வருகிறது என்பது நாம் அறிந்ததே.

இன்றைய பாதிக்கு மேல் மக்கள் ஆர்கானிக் உணவுக்கு மாற தொடங்கிவிட்டார்கள். இது அவர்களுடைய உடல் நலத்தை காப்பதுடன் மண் வளமும் சுற்றுப்புற சூழலும் பாதுகாத்து வரும் தலைமுறைக்கு மாசில்லாத உலகத்தை விட்டு செல்ல உதவுகின்றன.

**எவ்வாறு கணக்கிடப்படுகின்றன?**

உணவில் கனிம வைட்டமின்கள் அளவின் அடிப்படையாக தான் மதிப்பிடப்படுகிறது. இந்த வகையில் ஆர்கானிக் முறையில் விளைந்த பொருட்கள், காய்கள், பழங்கள், இயற்கை மணம் மாறாமல் சுவையுடன் இருக்கும். ஆர்கானிக் உணவு பொருட்களில் துளி அளவு இரசாயன மின்றி இருப்பதால் உடல் நலப் பாதிப்புகள் தவிர்க்கப்படுகிறது. எனவே நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க, நஞ்சில்ல உணவுகளை




உண்ண வேண்டும். இந்தியாவில் ஆர்கானிக் பெற சான்று முறை உள்ளது. தமிழகத்தில் இதற்கென தனி அங்கக சான்றிளிப்பு துறை இயங்கி வருகிறது. சிறு / குறு விவசாயிகள் 2700/-ம், பிற விவசாயிகளுக்கு 3200/-ம் குழுவாக பதிவு செய்ய 7200/-ம் வணிக நிறுவனங்கள் 9400/-ம் கட்டணமாக செலுத்தி முறையான ஆர்கானிக் சான்று பெற்று விளைப்பொருட்களை விற்பனை செய்யலாம்.

இன்றைய சூழலில் நகரவாசிகள் அனைவரும் எவ்வித இடைத்தரகரின்றி (FARM TO TABLE) என்ற நிலைக்கு மாறி வருவது ஆர்கானிக் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு விளைப்பொருட்களை கட்டுபடியான விலையில் விற்பனை செய்ய வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் பயிற்சி



அரியலூர், நவ.24

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டின் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நாகம்பந்தல் மற்றும் காட்டாத்தூர் கிராமம் விவசாயிகளுக்கு மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த பயிற்சி ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் விளந்தையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ராஜலட்சுமி தலைமை ஏற்று பேசுகையில், ஒருங் கிணைந்த பண்ணையம் என்பது விவசாயத்தில் ஒரு பண்ணை தொழிலை மட்டும் மேற்கொள்ளாமல் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடைய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்ணை தொழில்களை கூட்டாக மேற்கொள்ளுதலே ஒருங்கிணைந்த பண்ணையமாகும். இதனுடைய சிறப்பு என்னவென்றால் ஒரு பண்ணை தொழிலின் கழிவு பொருட்கள் மற்றொரு பண்ணை தொழிலுக்கு இடுபொருளாக மாறுவதால், ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் இருக்கின்ற நீர் வளத்தை சிறப்பாக பயன்படுத்தி அதிக லாபம் பெற்று வருடம் முழுவதும் வருவாய் கிடைக்க ஏதுவாகிறது எனக் கூறினார்.

வேளாண்மை அலுவலர் ராதிகா பேசுகையில் வேளாண்மை விரிவாக்க மையத்தின் மானிய திட்டங்கள் மற்றும் மானிய இடுபொருட்கள் குறித்த விவரத்தினை எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் பேசுகையில் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார். கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் அசோக் குமார் பேசுகையில் விவசாயி தங்களது நிலத்தில் ஒரு பயிரை மட்டும் சாகுபடி செய்வது மட்டுமல்லாமல் ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் மீன்

வளர்ப்பு போன்றவைகளை விவசாயிகள் கடைபிடிப்பதனால் பொருளாதாரம் மேம்படும் எனவும் கூறினார். இப்பயிற்சியில் உதவி கால்நடை மருத்துவர் வீர இந்திரன் மற்றும் செந்தில் குமார் ஆகியோர் கலந்து கொண்டு பேசுகையில் ஆடு, மாடு மற்றும் கோழி வளர்ப்பு முறை மற்றும் தடுப்பூசி விவரங்களை விளக்கி கூறினார்.

முன்னதாக வரவேற்று பேசிய அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் விஜயகுமார் அட்மா திட்டம் மற்றும் அதன் செயல் பாடுகள் குறித்து விளக்கினார். இப்பயிற்சிக்கான ஏற்பாட்டினை உதவி வேளாண்மை அலுவலர் சந்தோஷ் குமார் மற்றும் பழனிவேல் ஆகியோர் செய்திருந்தனர்.



# கொடுமுடி வட்டாரம் அஞ்சூரில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான ராபி பருவ பயிற்சி



ஈரோடு, நவ.24

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மூலம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படும் அஞ்சூர் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான ராபி பருவ பயிற்சி நடைப்பெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் பொ.யசோதா தலைமையேற்று சிறப்புரை யாற்றினார். இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் இராஜாமணி ராபி பருவ தொழில்நுட்பங்கள் பற்றியும் வேளாண் கடன் அட்டை, பயிர் காப்பீடு திட்டம் பற்றி விளக்கினார்.






மேலும் வேளாண்மை உதவி அலுவலர் சுரேஷ் வேளாண் மைத் துறையின் மூலம் செயல்படும் திட்டங்கள், விதை நெல் உயிர் உரங்கள், நுண்ணூட்டங்கள் இருப்பு விவரமும், PM Kisan உதவி தொகை விவசாயிகள் e-nam செய்தல் மற்றும் அவற்றின் பயன்களை விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். நெல், மஞ்சள் மற்றும் கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, நுண்ணூட்ட உரமிட வேண்டுதலின் அவசி யத்தை எடுத்துரைத்தார். தோட்டக்கலை உதவி அலுவலர் இராமச்சந்திரன் தோட்டக்கலை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர்கள் சுரேஷ், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்ட அலுவலர்கள் பயிற்சிக்கு ஏற்பாடுகளை செய்திருந்தினர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பொங்கலூர் பகுதியில் வீரிய ஒட்டு இரக மக்காச்சோள விதைப்பண்ணையில் அதிகாரிகள் ஆய்வு



திருப்பூர், நவ.24

பொங்கலூர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள விதைப் பண்ணைகளை திருப்பூர் மாவட்ட விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து ஆய்வு மேற்கொண்டார். அதன் ஒரு பகுதியாக பொங்கலூர் வட்டாரம், காட்டுர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள வீரிய ஒட்டு மக்காச் சோளம் கோ-6 விதைப்பண்ணையை ஆய்வு செய்து தரமான விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க அறிவுறுத்தினார்.

மக்காச்சோளத்தை மூலப்பொருளாக கொண்டு இயங்கும் கோழி, கால்நடை தீவனம், ஸ்டார்ச் தயாரிப்பு தொழிற்சாலைகள் திருப்பூர் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களில் அதிக அளவில் அமைந்துள்ளதால் மக்காச்சோளத்தின் தேவை அதிகரித்துள்ள நிலையில் விதை தேவையும் அதிகரித்துள்ளது. தனியார் விதைகளுக்கு ஈடாக வேளாண்மை பல்கலைக் கழகத்தால் கோ-6, கோ (H) னி 8 இரகங்கள் வெளியிடப்பட்டு திருப்பூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் விதைப்பண்ணை அமைக்கப்பட்டு விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் வீரிய இரக ஒட்டு மக்காச்சோளம் கோ-6 விதைப்பண்ணை பற்றி கூறியதாவது, கோ-6 ஆனது ஆண் UMI - 1230, பெண் UMI-1200 இவற்றின் கலப்பின விதை ஆகும். வீரிய ஒட்டு இரக விதைப்பண்ணை 200 மீட்டர் பயிர் விலகு தூரமும் ஆண் பெண் விகிதம் 2 : 4 என்ற அளவிலும் பராமரிக்கப்பட்டு எல்லை பயிர் முழுவதுமாக ஆண் பயிர்கள் நடப்பட்டு ஆண் வரிசை களை அடையாளம் காண குச்சிகளை ஊன்றப்படும்.

வளர்ச்சி, பூப்பருவம், பின்பூப்பருவம், முதிர்ச்சிப்பருவம் மற்றும் கதிர்கள் ஆய்வு என 5 நிலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்படும். ஆண் இலைகள் சற்றே அகலமாகவும், பெண் இலைகள் குறுகிய தாகவும் இருக்கும்.

விதைக்கப்பட்ட 50 நாட்களில் இருந்து பெண் வரிசைகளில் வரக்கூடிய ஆண் மலர்கள் வெளி வருவதற்கு முன்பே தொடர்ச்சி-யாக 20 நாட்களுக்கு காலை வேளையில் அகற்றப்படும். இதனால் ஆண் வரிசையில் உள்ள ஆண் பூக்களில் இருந்து மகரந்தம் பரவி பெண் வரிசையில் உள்ள கதிர்களில் மகரந்த சேர்க்கை நடைபெறும். மேலும், அறுவடையின் போது ஆண் கதிர்கள் தனியே அறுவடை செய்யப்பட்டு அகற்றப்பட்டு அதன் பின்னர் பெண் கதிர்கள் (வீரிய ஒட்டு மக்காச்சோளம்) அறுவடை செய்யப் பட்டு சுத்தம் செய்து விதை மாதிரிகள் எடுக்கப்படும். மாதிரிகள் பகுப்பாய்வில் தேர்ச்சி பெற்ற பிறகு சான்றுப்பணி மேற்கொள்ளப்பட்டு தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், சின்ன காட்டுர் பகுதிகளில் அமைந்துள்ள உளுந்து VBN-8 மற்றும் பாசிப்பயிறு CO-8 விதைப்பண்ணைகளை ஆய்வு செய்தார். ஆய்வின்போது பல்லடம், விதைச்சான்று அலுவலர், நா.செந்தமிழ்ச்செல்வன் மற்றும் பொங்கலூர் வட்டார உதவி விதை அலுவலர் ரவிக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.



# ஐபிகானப்பள்ளி கிராம வேளாண் முன்னேற்றக்குழு பயிற்சி

கிருஷ்ணகிரி, நவ.24

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண் துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ஐபிகானப் பள்ளி ஊராட்சியில் வேப்பனப்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி வைத்து கிராம வேளாண் முன்னேற்றக்குழு ராபி பருவ பயிற்சி மற்றும் வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.






இந்த பயிற்சியின் போது, சின்னகொத்தூர், கால்நடை உதவி மருத்துவர் ரமேஷ் கால்நடை பராமரிப்புத்துறையில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் கால்நடைக்கு வரும் நோய்கள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். வேப்பனப்பள்ளி துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன் கலந்துக் கொண்டு கோடை உழவின் பயன்கள், விதை நேர்த்தியின் பயன்கள், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், அசோலா பயன்கள், மண்புழு உரம் தயாரித்தல் பற்றி எடுத்து கூறினார். வேளாண்மை அலுவலர் சாந்தி கலந்துக் கொண்டு ராகி செயல் விளக்கம், மண் மாதிரி எடுத்தல் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து விளக்கம் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சுப்பிரமணி கலந்து கொண்டு கலைஞர் திட்டத்தின் நன்மைகள் மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் குறித்து கூறினார். இந்த பயிற்சியில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக் கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு மற்றும் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பாரதிராஜா உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமளித்தார்.


HEALTHY CROPS
HAPPY FARMER
SATHYAM
Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM
GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# கடலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள்

கடலூர், நவ.24

கடலூர் மாவட்டத்திற்கு இந்திய வானிலை துறையிடம் இருந்து பெறபட்ட வானிலை முன்னறிவிப்பில் இன்று முதல் 29.11.23 வரை மிதமான முதல் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 5 நாட்களுக்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 90-98% ஆகவும், பகல் நேரங்களில் 85-92% ஆக இருக்க வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 27-28°C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23-24°C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 6-8 கி.மீ ஆக வீசக்கூடும்.




அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான முதல் கன மழை பொழிவு எதிர்பார்க்கப்படுவதால், வயலில் நீர் தேங்காதவாறு முறையான வடிகால் வசதியினை மேம்படுத்தவும். வரும் நாட்களில் மழை எதிர் பார்க்கப்படுவதால் விவசாயிகள் பூச்சிக் கொல்லி, உரம், நோய் மற்றும் பூச்சிச் மேலாண்மைக்கான மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும் அல்லது மருந்து தெளிப்பதற்கும் மழை பெறுவதற்கும் குறைந்தது இரண்டு மணி நேர இடைவெளி இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும்.

தொடர்மழை அடுத்த ஐந்து நாட்களுக்கு எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் உளுந்து பயிர் செய்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. பயிர் செய்த வயல்களில் முறையான வடிகால் வசதியினை அமைக்கவும். மிதமான முதல் கன மழை உடன் காற்று வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

மழை நின்ற பின் நெற் பயிரில் இலைச்சுருட்டுப்புழுவின் தாக்கம் அதிகமாக வாய்ப்புள்ளது. இதன் அறிகுறிகள் இலைகள் நீள் வாக்கில் மடிக்கப்பட்டிருக்கும். புழுக்கள் இலைகளின் பச்சை

நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும். இலைகள் நீள்வாட்டில் சுருண்டு, புழுக்கள் அதனுள்ளே இருந்து விடும். மழை நின்ற பின் இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்போசல்பான் 400 மிலி அல்லது கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 600 கிராம் என்றளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.

நெல் வயலில் தொடர் மழை காரணமாகவும், அதிகமான காற்றின் ஈரப்பதம் மற்றும் மழை நீர் தேங்கிய பகுதிகளிலும் இலையுறை கருகல் நோயின் தாக்கம் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 300 கிராம் என்ற அளவில் 10 மிலி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். தற்போது ஆங்காங்கே மழை பெய்துள்ளது. மேலும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில் ஈரப் பதம் காரணமாக வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களில் பூஞ்சாணம் உருவாக வாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் நன்கு உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்குதலில் இருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம் என வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் க.நடராஜன், இணைப் பேராசிரியர் ஜெ.ஜெயகுமார், தொழில் நுட்ப வல்லுநர் ச.அருள்மதி மற்றும் வானிலை கண்காணிப்பாளர் மு.பாவனி அறிவுறுத்துகின்றனர்.



# சம்பா நெற்பயிரைத் தாக்கும் குலை நோய் மேலாண்மை முறைகள்



புதுக்கோட்டை, நவ.24

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வேளாண்மை உதவி இயக்குநர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, தற்போது நிலவும் தட்பவெப்ப நிலை காரணமாக பொன்னமராவதி வட்டாரத்தில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் குலை நோய் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இந்நோயினை விவசாயிகள் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்து கட்டுப்படுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## தாக்குதல் அறிகுறிகள்

இந்த குலை நோய்க்கான நோய் காரணி பைரிகுலோரியா ஒரோசே என்ற பூஞ்சாணமாகும். இப்பூஞ்சணமானது பயிரின் அனைத்து பகுதிகளிலும் (இலை, தண்டு, கணுப்பகுதி, கழுத்துப் பகுதி, கதிர்) பாதிப்பை ஏற்படுத்தும். இலைகளின் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல் நிற மைய பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும். தீவிர தாக்குதலின் போது பயிர் முழுவதும் எரிந்தது போன்று தோற்றமளிக்கும் இதையே ’குலை நோய்‘ என்கிறோம். கழுத்துப்பகுதியில் சாம்பல் நிறம் முதல் பழுப்பு நிற புள்ளிகள் தோன்றி, கருப்பு நிறமாக மாறி, கதிர் மணிகள் சுருங்கியும் / பகுதி நிறைந்தும் கதிர்கள் உடைந்து தொங்கிக் கொண்டிருக்கும். இதை ’கழுத்து குலை நோய்‘ என்கிறோம். கணுக்கள் கருப்பு நிறமாக மாறி உடைந்துவிடும். இதை ’கணு குலைநோய்‘ என்கிறோம். நெல் ரகங்களை பொறுத்து புள்ளி களின் அளவும் வடிவமும் வேறுபடும். இந்த குலை நோய் தாக்குதலினால் 50% வரை மகசூல் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனால் விளைச்சல் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கின்றனர். எனவே ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்துவது மிகவும் அவசிய மாகும்.

மேகமூட்டமுள்ள வானம், தொடர் மழை மற்றும் தூரல்கள், அதிக அளவில் பயன்படுத்தப்படும் யூரியா போன்ற தழைச்சத்து உரங்கள், காற்றின் ஈரப்பதம் 90% மற்றும் அதற்கு அதிகமாக இருத்தல் ஆகிய காரணிகள் நோய் பரவ காரணமாக உள்ளது. நெற்பயிரில் குலை நோயானது காற்று, விதை மற்றும் நோயுற்ற வைக்கோல் ஆகியவை மூலமும் பரவுகிறது.

குலை நோயை கட்டுப்படுத்திட விவசாயிகள் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளை கடைப்பிடித்தல் வேண்டும். நோயற்ற பயிரிலிருந்து விதைகளை தேர்வு செய்ய வேண்டும். வயல், வரப்புகள் மற்றும் பாத்திகளின் மீது உள்ள புல் வகைகள், மற்ற களைகளை அழிக்க வேண்டும். நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்களை பயிர் செய்ய வேண்டும்.




1 கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸ் ப்ளுரோசன்ஸ் / பேசில்லஸ் சப்டிலிஸ் அல்லது 2 கிராம் கார்பன்டசிம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். நாற்றாங்கால் 8 சென்ட்க்கு சூடோமோனஸ் 600 கிராம் 20 கிலோ மணலுடன் கலந்து இடவும்.

நடவு வயலில் ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனஸ் ப்ளுரோசன்ஸ் நட்ட 30வது நாள் இடவும். நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் தழைச் சத்து இடுவதை தவிர்க்கவும். பச்சை வண்ண இலை அட்டையை உபயோகித்து தழைச் சத்து இடுவது நோய் தாக்குதலை குறைக்கும்.

ஏக்கருக்கு சூடோமோனஸ் ஒரு கிலோவினை 200 லிட்டர் நீரில் கரைத்து 0.5 சதவிகித கரைசலாக தெளிக்கவும். தாக்குதல் அறிகுறி அதிகமாகும் போது ஒரு ஏக்கருக்கு டிரைசைக் கோளோசோல் (75%W.P) - 120 கிராம் அல்லது கிட்டாசின் (40 இ.சி) - 200 மி.லி, அசாக்சிட்ரோபின் (25%SC) மி.லி, மெட்ட மினோஸ்ட்ரோபின் (20%SC) 200மி.லி இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தை தெளித்து கட்டுப்படுத்தலாம்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# புதுவலசை கிராம வேளாண் முன்னேற்றக் குழு ராபி பருவ விவசாயிகள் பயிற்சி



இராமநாதபுரம், நவ.24

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி வட்டாரத்தில் வேளாண் துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் மூலம் 2023-24 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட புதுவலசை கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழு அமைக் கப்பட்டு அக்குழு உறுப்பினர்களுக்கு ராபி பருவ விவசாயிகள் பயிற்சியானது நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருப்புல்லாணி வேளாண்மை உதவி இயக்குனர் எம்.கே.அமர்லால் தலைமை ஏற்று வேளாண்மைத் துறை திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

பின்னர் உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயிர்க் கடன் பெற்று பயன்பெற வேண்டும் என தெரிவித்துள்ளார். நெல் சாகுபடியில் விதை நேர்த்தி செய்து அதிக மகசூல் பெறலாம், விதை நேர்த்தியென்பது விதைகளின் முளைப்புத்திறனை அதிகரிக்கவும், பயிர்களை நோய் மற்றும் பூச்சித் தாக்குதலில் இருந்து பாது காக்கவும் பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கவும் விதைக்கும் முன்பு விதைகளை ரசாயன பூஞ்சாண மற்றும் பூச்சிக்கொல்லிகள் அல்லது எதிர் உயிர் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாக்களைக் கொண்டு உயிர் உரங்களுடன் மேல் பூச்சு செய்வதே ஆகும் என்று விளக்கம் அளித்தார்.

தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக பயனளிக்கும் விதத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தென்னை டானிக் என்ற தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து உள்ளது. இது குறித்து இராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் முனைவர் பாலாஜி கூறியதாவது, தென்னை டானிக் மரங்களில் குரும்பை உதிர்வது குறைந்து காய்களின் எண்ணிக்கை அதிகரித்து, காய்களின் பருமனும் தரமும் அதிகரிக்கிறது. தென்னை டானிக்கில் நைட்ரஜன், பொட்டாசியம், மக்னீசியம், இரும்பு, துத்தநாகம், தாமிரம், மாங்கனீசு, போரான் மற்றும் மாலிப்பிடினம் ஆகிய மரத்திற்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் சரியான விகிதத்தில் கலந்துள்ளன. இந்த டானிக் மூலம் மரத்துக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்கள் சரியான விகி தத்தில் நேரடியாக மரத்திற்குள் செலுத்த முடிகிறது. மேலும், நோய், பூச்சி தாக்குதல் மற்றும் வறட்சி ஆகியவற்றை எதிர்கொள்ளும் இயற்கையான எதிர்ப்பு சக்தியும் மரத்தில் அதிகரிக்கிறது.

மரத்திலிருந்து மூன்று அடி தள்ளி மண்ணை தோண்டியெடுத்து, பென்சில் கனமுள்ள வெள்ளைநிற உறிஞ்சும் வேர் ஒன்றை தேர்வு செய்து வேரின் நுனியை மட்டும் சாய்வாக சீவி விடவேண்டும். பின்னர், டானிக் உள்ள பையின் அடிவரை வேரை நுழைத்து, வேரையும் பையின் மேல் பாகத்தையும் நூலால் கட்டி, டானிக் கீழே சிந்தாத வகையில், மண்ணை அணைத்து விட வேண்டும். மண்ணில் ஈரத்தன்மை குறைவாக இருந்தால் 12 மணி நேரத் துக்குள் டானிக்கை வேர் உறிஞ்சிவிடும். 6 மாதங்களுக்கு ஒரு முறை வேர் மூலம் டானிக் செலுத்தினால் மரங்கள் செழிப்பாக வளர்ந்து உயர் விளைச்சல் கொடுக்கும். மேலும் நுண்ணூட்ட கலவை உரத்தில் இரும்புச்சத்து 3.80 சதவீதம், மாங்கனீசு 4.80 சதவீதம், துத்தநாகம் 5 சதவீதம், போரான் 1.6 சதவீதம், தாமிரச் சத்து 0.5 சதவீதம் உள்ளது. நுண்ணூட்ட கலவையினை தென்னை மரங்களுக்கு இடுவதன் மூலம் ஒல்லிக்காய்களும், தேரைக் காய்களும் விளைவதை தடுத்து நல்ல தேங்காய் பருப்புகள், விளைச்சல் மிகுந்த தரமான தேங்காய்களை விளைவிக்கலாம் என விளக்கம் அளித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் மா.பவித்ரன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் கஸ்தூரி செய்திருந்தனர். இப்பயிற்சியில் 35 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சி முடிவில் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.



# மரப்பயிர்களில் நாற்றாங்கால் உற்பத்தி முறைகள் மற்றும் பராமரிப்பு



கடலூர், நவ.24

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், மரப்பயிர்களில் நாற்றாங்கால் உற்பத்தி முறைகள் மற்றும் பராமரிப்பு பற்றிய இரண்டு நாள் திறன் வளர்ப்பு பயிற்சி 23.11.23 மற்றும் 24.11.23 நடைபெற்றது.

முன்னதாக வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன் இப்பயிற்சியை துவக்கி வைத்தார். இப்பயிற்சியில் வேளாண்மை பல்கலைக் கழகம் கோவையிலிருந்து இணைப்பேராசிரியர் முனைவர்




ஆ.சிவபிரகாஷ் (வனவியல்) மற்றும் வனவியல் கல்லூரி மேட்டுப்பாளையம் உதவிபேராசிரியர் முனைவர் ஊ.குமார் (வனவியல்), வேளாண் காடுகளின் வகைகள் பற்றியும், நாற்றாங்கால் அமைக்கும் முறைகள் மற்றும் அதன் பயன்பாடுகள் தெளிவாக எடுத்துரைத்தார். மாநில தோட்டக்கலை பண்ணையை பார்வையிட்டனர் மற்றும் மரப்பயிர்களில் பல வகையான நாற்றாங்கால் உற்பத்தி செய்யும் முறையை செயல் விளக்கத்துடன் தெரிந்து கொண்டனர்.

மேலும் இப்பயிற்சியில் கடலூர், நாகப்பட்டினம், திருப்பத்தூர், விழுப்புரம், மயிலாடுதுறை, வேலூர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த 40 வேளாண்மை அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், வனவியல் அலுவலர்கள் மற்றும் உதவி தோட்டக் கலை அலுவலர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சியில் வேளாண் காடுகள், தரமான நாற்றாங்கால் உற்பத்தி செய்யும் முறைகள் சம்மந்தமான கையேடு அனைவருக்கும் வழங்கப்பட்டது.